# DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

***Assistant Sessions Judge, Sankari***

**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| | | |
|---|---|---|
| *Calender* | } | |
| *Miscellaneous* | } | |
| *Preliminary Register* | } | |
| *Sessions* | } | *Case No.**SC.67/2025*** |

| | |
|---|---|
| *Deposition of Witness* | { ***PW.4*** |
| | { *Prosecution* |
| | { |
| *Name* | : **கார்த்திகேயன்** |
| *Father's Name* | : |
| *Taluk* | : |
| *Calling* | : |
| *Religion* | : |
| *Age* | : |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026.*

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தற்போது சங்ககிரியில் வசிக்கிறேன். நான் மதுபானக் கூடத்தில் சப்ளையராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு என்னை சங்ககிரி போலீசார் காவல் நிலையம் வரசொன்னார்கள். நான் போனபோது என்னிடம் கைரேகை வாங்கினார்கள், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கைரேகைகள் என்னுடையதுதான். அவைகள் அ.சா.ஆ.2 முதல் 4 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 10.01.2021 ம் தேதி இரவு 8.30 மணி சுமாருக்கு சங்ககிரி மலையடிவாரம் மசூதி அருகே உள்ள வாசுகி மஹால் அருகே குடியிருக்கும் மூர்த்தி அக்கம்மாபேட்டையை சேர்ந்த சண்முகம், கிடையூர் மேட்டுரைச் சேர்ந்த கனகராஜ், திருச்செங்கோட்டை சேர்ந்த கண்ணன்(எ) கண்ணத்தா, தாமு(எ) தாமோதரன் ஆகியோர்கள் நேற்று இரவு கலியனூர் பிரிவு அருகே சென்று பைபாஸில் போகும் லாரியை நிறுத்தி மிரட்டி பணம் பறிக்கலாம் என்றும், ஆள் இல்லாமல் இருக்கும் குடியிருப்புகளை பார்த்து திருடலாம் என்றும், அதற்கு மிளகாய் பொடி, கத்தி, இரும்பு கம்பி, உருட்டுக் கட்டை, மங்கி குல்லா எல்லாம் ரெ செய்து கனகராஜ் இடம் சொல்லி இரவு 9.00 மணி சுமாருக்கு கலியனூர் பிரிவு அருகே வந்துவிடும்படி சொன்னதாக கேள்விப்பட்டேன் என்றும், நேற்று 11.00 மணிக்கு சுமாருக்கு நானும், சங்ககிரி குப்தா காலனியைச் சேர்ந்த எனது நண்பர் கந்தசாமி மகன் பூபதி என்பவரும் மலையடிவாரம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது சம்பவ இடத்திற்கு வந்த சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்கள் எங்கள் இருவரையும் அழைத்து எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை எமர்ஜென்சி லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அதில் நான் கைரேகை வைத்தேன் என்றும், என்னுடன் பூபதி என்பவர் கையெழுத்து செய்தார் என்றும், அன்று இரவு 11.30 மணிக்கு சங்ககிரி இன்ஸ்பெக்டர் எனக்கு போன் செய்து சங்ககிரி காவல் நிலைய குற்ற எண் 27/2021 வழக்கிற்காக சம்பந்தப்பட்ட எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாகவும், அவர்களை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்க சாட்சிகளாக என்னையும், பூபதியையும் அழைத்ததின் பேரில் நானும், பூபதியும் அதிகாலை 2.45 மணி சுமாருக்கு கலியனூர் பிரிவுக்கு வந்தோம் என்றும், அங்கு வழக்கின் எதிரி கனகராஜ் த/பெ. பழனியப்பன், கிடையூர் மேட்டுர், சண்முகம் த/பெ. செங்கோடன், அக்காம்மாபேட்டை, சங்ககிரி கண்ணன்(எ)கண்ணத்தா த/பெ. வெங்கடாசலம், நாமக்கல் ரோடு. திருச்செங்கோடு ஆகியோர்களை பிடித்து வைத்திருந்தார் என்றும், எங்கள் முன்னிலையில் எதிரி கனகராஜ் என்பவரை விசாரித்து எந்தவிதமான அச்சுறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி விசாரித்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அதில் நான் கைரேகை வைத்தேன் என்றும், பூபதி கையெழுத்து செய்தார் என்றும், பின்னர் எதிரிகள் மூர்த்தி, சண்முகம், கனகராஜ், கண்ணன்(எ)கண்ணாத்தா, தாமு(எ)தாமோதரன் ஆகிய 5 பேரும் பைபாஸில் போகும் லாரிகளை நிறுத்தி பணம் பறிக்கலாம் என்றும், ஆள் இல்லாத பூட்டிய வீடுகளை உடைத்து திருடலாம் என்றும், கொள்ளையடிக்க திட்டம் போட்டு

கலியனூர் பிரிவு அருகே ஒன்று சேர்ந்து கொள்ளையடிக்க ஆயத்தமாக இருந்ததாக கூறியதை ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளார் என்றும், எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் புதரில் எதிரி மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த இரும்பு கம்பி ஒன்று, மிளகாய் பொடி 2 பாக்கெட், உருட்டுக்கட்டை ஒன்று, கத்தி ஒன்று, மங்கி குல்லா 4 ஆகியவற்றை அன்று விடியற்காலை 4.45 மணிக்கு எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் நான் ரேகை வைத்தேன் என்றும், என்னுடன் பூபதி கையெழுத்து செய்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

<u>நீதிமன்ற கேள்வி</u>

என்னை காவல் நிலையத்திற்கு அழைத்த காவலரின் பெயர் தெரியுமா என்றால், தெரியாது. எங்கு வந்து என்னை காவல் நிலையம் வர சொன்னார்கள் என்றால், நான் வேலை செய்த மதுபான கூடத்திற்கு வந்து சொன்னார்கள். என்னை வரச்சொன்ன காவலர்கள் சீருடையில் இருந்தார்களா என்றால், இருந்தார்கள். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியாது. நான் காவல் நிலையம் சென்றபோது அங்கு ஆய்வாளர் முத்துசாமி இருந்தாரா என்றால், எனக்கு யாருடைய பெயரும் தெரியாது. எத்தனை காவலர்கள் அங்கு சீருடையில் இருந்தார்கள் என்றால், 3 பேர் இருந்தார்கள். ஆவணங்களை படித்து பார்க்காமல் எதற்காக கைரேகை செய்து கொடுத்தேன் என்றால், போலீசார் என்பதால் பயந்துகொண்டு கைரேகை செய்து கொடுத்துவிட்டேன்.

ஒப்பம்/-கார்த்திகேயன்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி,சங்ககிரி.